**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL CHIEF JUDICIAL MAGISTRATE, KUMBAKONAM**

**Case No.04/2019**

**Prosecution Witness**

**Name** :திரு.அடைக்கலம் (எ) சாமிக்கண்ணு
**Father's/Spouse's Name** :திரு.அடைக்கண்
**Address** :குலவாய்பட்டி, புதூர் அஞ்சல், முக்கண்ணாமலைப்பட்டி வழி, இலுப்பூர் தாலுக்கா, புதுக்கோட்டை மாவட்டம்
**Calling** :விவசாயம்
**Religion** :இந்து
**Age** :60

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of 23.04.2024.**

**Signature of witness,**

**(A2,A4,A6 are absent, petition u/s 317 Cr.P.C is filed and allowed)**

**CC.No.04/2019 PW :5 (LW-5) 23.04.2024**

முதல் விசாரணை

நான் குலவாய்பட்டி, புதூர் அஞ்சல், முக்கண்ணாமலைப்பட்டி வழி, இலுப்பூர் தாலுக்கா, புதுக்கோட்டை மாவட்டம் என்ற முகவரியில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். 22.02.2005 அன்று பிடாரிஅம்மன் கோவிலில் சாமி சிலைகளை காணவில்லை என்று பூசாரி சொக்கையா கூறினார். அதன் பின்னர் சிலையை தேடிப்பார்த்து சிலைகள் கிடைக்காத காரணத்தினால் மறுநாள் குப்பன் புகார் கொடுத்தார். மறுநாள் 24.02.2005 அன்று போலீசார் பிடாரிஅம்மன் கோவிலை வந்து பார்வையிட்டு படம் வரைந்து எழுதிக்கொண்டு என்னிடமும் பழனியாண்டியிடமும் சாட்சியாக கையொப்பம் வாங்கினார்கள். நான் கையொப்பம் போட்ட அந்த ஆவணம் என்னிடம்

காட்டப்படுவதுதான். அந்த பார்வை மகசர் ஏற்கனவே அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

இல்லை.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL CHIEF JUDICIAL MAGISTRATE, KUMBAKONAM**

**Case No.04/2019**

**Prosecution Witness**

**Name** :திரு.குப்பன்
**Father's/Spouse's Name** :திரு.சின்னான் கோணார்
**Address** :குலவாய்பட்டி, புதூர் அஞ்சல், முக்கண்ணாமலைப்பட்டி வழி, இலுப்பூர் தாலுக்கா, புதுக்கோட்டை மாவட்டம்
**Calling** :விவசாயம் மற்றும் ஊராட்சி மன்ற தலைவர்
**Religion** :இந்து
**Age** :54

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of 23.04.2024.**

**Signature of witness,**

**(A2,A4,A6 are absent, petition u/s 317 Cr.P.C is filed and allowed)**

**CC.No.04/2019 PW :4 (LW-1) 23.04.2024**

முதல் விசாரணை

நான் குலவாய்பட்டி, புதூர் அஞ்சல், முக்கண்ணாமலைப்பட்டி வழி, இலுப்பூர் தாலுக்கா, புதுக்கோட்டை மாவட்டம் என்ற முகவரியில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். நான் ஊராட்சி மன்ற தலைவராக பணியாற்றினேன். எங்கள் ஊரில் இந்து சமய அறநிலையத்துறை சம்மந்தப்பட்ட அய்யனார், அடைக்கலம் காத்தான் கோவில்கள் உள்ளது. மேலும், நாலு கிடாய் கருப்பர், பிடாரி அம்மன் கோவில் மற்றும் பஞ்சமுனி கோவில்கள் உள்ளது. பிடாரி அம்மன் கோவில் என்பது நாங்கள் சேர்ந்து வழிபடக்கூடிய கிராம கோவிலாகும். அந்த கோவிலை நாங்கள் தான் நிர்வாகம் செய்து வருகிறோம். 22.02.2005 அன்று வழக்கம் போல் காலையில் பூஜை செய்துவிட்டு பூசாரி அடைக்கண் த/பெ. சொக்கன் சென்றுவிட்டார். மீண்டும் மாலை 04.00 மணியளவில் பூசாரி அடைக்கண் த/பெ. சொக்கன் பக்கத்தில் உள்ள அவரது வயலுக்கு தண்ணீர் பாய்ச்ச வந்த போது கோவிலில் கூட்டமாக இருந்துள்ளது. பக்கத்தில் ஒரு வேனும் நின்றுள்ளது.

என்ன கூட்டமாக உள்ளது என்று அவர் சென்று பார்த்தபோது அங்குள்ள நபர்கள் அவரை மிரட்டியதால் அவர் சத்தம் போட்டு பக்கத்தில் உள்ள வயலில் உள்ள எல்லோரும் வந்துள்ளார்கள். உடனே எல்லோரும் ஓடிவிட்டார்கள். அதில் சக்திவேல் என்பவர் மட்டும் கரும்புக்காட்டிற்குள் பதுங்கிவிட்டார். பின்னர் வெளியில் வந்தபோது அடுத்த நாள் 23ம் தேதி அவரை பிடித்து காவல் நிலையத்தில் ஒப்படைத்தோம். ஓட்டுக்கட்டிடத்தில் இருந்த பிடாரிஅம்மன், 7 சப்தகன்னிகள் சிலைகள், விநாயகர் சிலை ஆகிய அனைத்தையும் காணவில்லை. விநாயகர் சிலையும் அந்த சப்த கன்னிகள் 7 சிலைகளுக்குள் அடங்கும். மொத்தம் 8 சிலைகளை காணவில்லை. குளம் குட்டைகளில் ஒரு நாள் இரவு மற்றும் பகல் முழுவதும் தேடிப்பார்த்தோம். மறுநாள் இது சம்மந்தமாக நான் புகார் கொடுத்தேன். நான் கொடுத்த புகார் என்னிடம் காட்டப்படுவதுான். அது அ.சா.ஆ.2 ஆகும். திருடுபோன சிலைகளை பார்த்தால் எனக்கு அடையாளம் தெரியும். காணாமல் போய் கண்டறியப்பட்ட சிலைகளின் புகைப்படங்கள் என்னிடம் காட்டப்படுவதுதான். அது ஏற்கனவே அ.சா.பொ.1 வரிசையாக குறியீடு செய்யப்பட்டுள்ளது. சக்திவேல் கொடுத்த தகவலின் அடிப்படையில் சிலைகள் கண்டறியப்பட்டு காவல் நிலையத்தில் அந்த சிலைகளை நான் அடையாளம் காட்டினேன். நீதிமன்றத்தில் அந்த சிலைகள் ஆஜர்படுத்தப்பட்டு நான் மனுதாக்கல் செய்து சிலைகளை நானும், அடைக்கண் த/பெ. சொக்கன் பூசாரியும் இடைக்கால பாதுகாப்பில் பெற்றுக்கொண்டோம். அடைக்கண் பூசாரி குடுமியான் மலை கோவிலில் தேவஸ்தான் இரவு பகல் காவலர் என்பதால் அவர் இல்லாத நேரத்தில் மற்ற நபர்களும் பூஜை செய்வார்கள். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

அரசு தரப்பில் சாட்சியை சம்பவம் நடந்த தேதி குறித்து பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்குமாறு கோரப்பட்டது. சாட்சியின் சாட்சியம் மற்றும் வழக்கு ஆவணங்களை பரிசீலித்து சாட்சியை சம்பவம் நடந்த தேதி குறித்து பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது.

அரசு தரப்பு குறுக்கு விசாரணை

அந்த கோவிலில் திருட்டு சம்பவம் நடைபெறுவதற்கு முன்பு திருட முயற்சி நடந்தது என்று சொன்னால் சரியல்ல. சக்திவேல் மீது இதே கோவில் சம்மந்தமாக சிலை திருட்டு தொடர்பாக கீரனூர் நீதிமன்றத்தில் வழக்கு நடந்ததில் நான் சாட்சியம் கூறியுள்ளேன். சக்திவேல் மீது கீரனூர் நீதிமன்றத்தில் நடந்த வழக்கு நான் முதல் விசாரணையில் கூறிய 22ம் தேதிக்கு முன்னர் திருட்டு முயற்சி நடந்தது தொடர்பான

வழக்கு என்று சொன்னால் சரியல்ல. 2005 ம் ஆண்டு நடந்த சம்பவம் என்பதால் ஞாபக மறதியாக திருட்டு முயற்சி நடந்த சங்கதிகளை 22.02.2005 அன்று நடந்த திருட்டு சம்பவத்துடன் சேர்த்து சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரிதான்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

இல்லை.